Literacy for a Billion

Movie: Anandham
Year: 2001

Song: Pallanghuzhi
Lyricist: YugaBharathi

பல்லாங்குழியின்
வட்டம் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
புல்லாங்குழன்
துளைகள் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
துடிக்கும் கண்களில்
கண்மணி பார்த்தேன்
கடிகாரத்தில்
நேரம் பார்த்தேன்
செவ்வந்திப்பூவின்
நடுவில் பார்த்தேன்
தேசியக்கொடியில்
சக்கரம் பார்த்தேன்
இரவில் ஒருநாள்
பவுர்ணமி பார்த்தேன்
ஒற்றை நாணயம்
பல்லாங்குழியின்
வட்டம் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
புல்லாங்குழன்
துளைகள் பார்த்தேன்
ஒற்றை நாணயம்

அடி காலம் முழுவதும்
காத்திருப்பேன்
நீ காணும் இடத்தினில்
பூத்திருப்பேன்
அடி ஒற்றை ரூபாய்
பக்கம் இரண்டும்
எந்தன் அன்பு
சேர்ந்திருக்கும்
நெஞ்சில் வைத்து காத்திரு
தங்க ஆபரணம்
ஒன்றும் தேவையில்லை

இந்த நாணயம் போதாதா
தளும்பும் மனதில்

குங்கும சிமிழில்
படுக்க முடியாதா
செல்வ சீதனமே
நீ சிரிக்கையிலே
பல சில்லரை சிதறி விழும்
செலவு செய்திட
நினைத்தால் கூட
இதயம் பதறிவிடும்
பல்லாங்குழியின்
வட்டம் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
புல்லாங்குழன்
துளைகள் பார்த்தேன்
ஒற்றை நாணயம்

அட நேற்று நடந்தது
நாடகமோ
நீ காசு கொடுத்தது
சாஸ்வதமோ
அட ஒற்றை ரூபாய்
பக்கம் இரண்டு
என்ன சொல்ல
காசு தந்தாய்
எண்ணி எண்ணி
பார்க்கிறேன்
அடி பேரழகே
உன்னை சேர்ந்திடவே
இந்த நாணயம் ஓர் சாட்சி
இருக்கும் உயிரும்
உனக்கே உபயம்
எதற்கு ஆராய்ச்சி
இந்த நாணயத்தில்

உன்னை பார்த்திருப்பேன்
பிறர் பார்க்கவும்
விடமாட்டேன்
கடவுள் வந்து
கேட்டால் கூட
காணிக்கையிட மாட்டேன்
பல்லாங்குழியின்
வட்டம் பார்த்தேன்
ஒற்றை நாணயம்
புல்லாங்குழன்
துளைகள் பார்த்தேன்
ஒற்றை நாணயம்

துடிக்கும் கண்களில்
கண்மணி பார்த்தேன்
கடிகாரத்தில்
நேரம் பார்த்தேன்
செவ்வந்திப்பூவின்
நடுவில் பார்த்தேன்
தேசியக்கொடியில்
சக்கரம் பார்த்தேன்
இரவில் ஒருநாள்
பவுர்ணமி பார்த்தேன்
ஒற்றை நாணயம்

Disclaimer: PlanetRead does not own these lyrics and is not using them for any commercial purpose. For over 20 years, PlanetRead has been subtitling Bollywood songs for mass literacy. These lyrics are being offered as part of PlanetRead's literacy development initiative.

PlanetRead is a tax-exempt, not-for-profit: 501(c) (3) in the United States and 80(G) in India.